சார்பு நீதிமன்றம், மேலூர்

OS No. 283/2022

பெயர் : பிச்சை

தகப்பனார் பெயர் :சேதுஅய்யனார்

கணவர் பெயர் :

வயது :79

கிராமம் :அதலை

வட்டம் :மதுரை

தொழில் :தற்போது வேலையில்லை, விவசாயம்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

07.02.2025

வா.சா.1 முதல் விசாரணை:

நான் இந்த வழக்கில் வாதி. என்னுடைய முதல் விசாரணையை எழுத்து வடிவ பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் கண்ட சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டது தான். அதில் கண்ட சங்கதிகளை எல்லாம் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். சர்வே நம்பர் 114/8, பழைய சர்வே நம்பர் 37/1 தொடர்பான தோராய பட்டா அசல் வா.சா.ஆ.1. சர்வே நம்பர் 122/5, பழைய சர்வே நம்பர் 37/1 தொடர்பான தோராய பட்டா அசல் வா.சா.ஆ.2. என் மாமனார் ஆண்டிக்கோனுடைய இறப்பு சான்றிதழ் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது வா.சா.ஆ.3. ஆண்டிக்கோனுடைய வாரிசுதாரர் சான்றிதழ் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது வா.சா.ஆ.4. பட்டா பாஸ் புத்தகம் என் மனைவி பழனியம்மாள் பெயரில் உள்ளது அசல் வா.சா.ஆ.5. என் மனைவி பழனியம்மாள் உடன் பிறந்த சகோதரி கருப்பாயி அம்மாள் இறப்பு சான்றிதழ் ஒளிநகல் வா.சா.ஆ.6. என் மனைவி மற்றும் என் மனைவி உடன்பிறந்தோர் ஆகியோருடைய பட்டா

வா.சா.ஆ.7. என் மனைவி பழனியம்மாள் இறப்பு சான்றிதழ் ஒளிநகல் வா.சா.ஆ.8. என் மனைவி பழனியம்மாள் வாரிசுதாரர் சான்றிதழ் நகல் வா.சா.ஆ.9. வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.10. அதை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டைகள் 7 வா.சா.ஆ.11 வரிசை. அரசு வழிகாட்டுதல் மதிப்பு வா.சா.ஆ.12.

குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.02.07 21:08:34 +0530

Sub Judge

Melur